Australian Government

COVID-19 VACCINATION

# ‘கோவிட்-19’ தடுப்பூசியை இட்டுக்கொள்வதற்காக ஆயத்தமாதல்

கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது: 30 ஜூலை 2021

## உங்களைப் பற்றிய விபரங்கள் சரியானவையே என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்

உங்களுடைய சந்திப்புவேளைக்காக நீங்கள் காத்திருக்கும் வேளையில், ஆயத்தமாவதற்காக இப்போது நீங்கள் செய்ய இயலுமான விடயங்கள் சில உள்ளன.

நீங்கள் தகுதி பெறுபவர் என்றால், உங்களைப் பற்றிய விபரங்கள் அனைத்தும் up to date with Medicare (‘மெடிகெய’ரில் நடப்பு-நாள் வரைக்கும் சரியானவையாக உள்ளன) என்பதை உறுதிப்படுத்துங்கள் (‘மெடிகெயர்’ வசதிக்கு நீங்கள் தகுதி பெறவில்லை என்றாலும், உங்களால் ‘கோவிட்-19’ தடுப்பூசி ஒன்றை இலவசமாக இட்டுக்கொள்ள இயலும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்). பின் வருவனவற்றில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தி நீங்கள் இதைச் செய்யலாம்:

- myGov மூலமாக Medicare online account-இல்
- Express Plus Medicare app-எனும் செயலியைப் பயன்படுத்தி.
- Medicare program எனும் சேவையைத் தொலைபேசியில் அழைப்பதன் மூலமாக.

உங்களுக்கான கணக்கை நீங்கள் ஏற்படுத்திக்கொண்டிருக்காவிட்டால், நீங்கள் செய்யக்கூடியன:

- ஏற்கனவே நீங்கள் சேர்ந்திருக்காவிட்டால், ‘மெடிகெயர்’-இல் சேருங்கள் (Enrol in Medicare).
- நீங்கள் ‘மெடிகெயர்’-இல் சேர்ந்திருந்து, உங்களுடைய ‘மெடிகெயர்’-ஐ ‘மை-கவ்’ -உடன் இணைத்திருக்காவிட்டால், உங்களுக்கான ‘மெடிகெயர்’ இணையவழிக் கணக்கை (Set up) ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

- நீங்கள் ‘மெடிகெயர்’ வசதிக்குத் தகுதி பெறாதவர் என்றால் ‘தனிநபர் சுகாதார அடையாளக் குறியீடு’ ஒன்றைப் பெறுங்கள் (Get an Individual Health Identifier (IHI)). உங்களுடைய தடுப்பூசி மருந்தினை நீங்கள் இட்டுக்கொண்டதும், உங்களுடைய தடுப்பூசித் தகுநிலையை நிரூபிக்க தடுப்பூசி வரலாறு ஒன்றினை உங்களால் பெற இயலும்.

‘சர்வீஸஸ் ஆஸ்திரேலியா’ (Services Australia) வலைத்தலத்தில் ‘உங்களுடைய தடுப்பூசி வரலாற்றுக் கூற்றைப் பெறுவது எவ்வாறு’ என்பதை நீங்கள் காணலாம் (how to get your immunisation history statement).

## உங்களுடைய சந்திப்புவேளைக்காக ஆயத்தமாதல்

ஆஸ்திரேலியாவிலும் உலகளாவிய ரீதியிலும் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளுக்கான விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளது. தீவிரமான ‘கோவிட்-19’ நோய்க்கு ஆளாகும் ஆபத்து, மற்றும்/அல்லது இந்த வைரஸ்-ஐ எதிர்கொள்ளும் ஆபத்து அதியுயர் அளவில் உள்ளவர்கள் இந்தத் தடுப்பூசி மருந்தினை முதலில் பெறுவார்கள் என்பது இதன் அர்த்தம். மற்றவர்கள் காலப் போக்கில் தடுப்பூசி மருந்தினைப் பெறுவார்கள். www.health.gov.au/covid19-vaccines எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் சென்று தடுப்பூசி மருந்து இடப்படுவதற்கான முந்துரிமை யாருக்குக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். https://covid-vaccine.healthdirect.gov.au/ எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் சென்று ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்வதற்கான சந்திப்புவேளை ஒன்றை உங்களால் முன்பதிவு செய்துகொள்ள இயலுமா என்று நீங்கள் சோதித்துக்கொள்ளலாம்.

பின் வரும் தருணங்களில் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்வதற்கான சந்திப்புவேளை ஒன்றிற்கு நீங்கள் வரக் **கூடாது**:

- சுரம், இருமல், நாசிக் கசிவு அல்லது ‘கோவிட்-19’ காரணமாக ஏற்படிருக்கக்கூடிய மற்ற நோயறிகுறிகளுடன் நீங்கள் உடல்நிலை சரி இல்லாமல் இருந்தால்
- ‘கோவிட்-19’ நோயறிவுச் சோதனை முடிவிற்காக நீங்கள் காத்துக்கொண்டிருந்தால்
- உங்களுக்குக் ‘கோவிட்-19’ இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டு நீங்கள் தனிமையில் இருந்தால்
- நீங்கள் ‘நோய்க்காப்புத் தடை’(quarantine)-யில் இருந்தால்
- ‘கோவிட்-19’ தொற்று உள்ள ஒருவருடன் நீங்கள் நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர் என்றால்.

நீங்கள் மேலே சொல்லப்பட்டுள்ள வகைகளில் எதையும் சார்ந்தவர் என்றால், உங்களுடைய தடுப்பூசி மருந்து வழங்குநருடன் சோதித்துத் தெரிந்துகொள்ளுங்கள். தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதற்கான உங்களுடைய சந்திப்புவேளையை இன்னொரு நேரத்திற்கு நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கக்கூடும். ‘கோவிட்-19’-இற்கான சிகிச்சையில் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் செயலூக்கமானவை அல்ல.

உங்களுடைய ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்திற்கான சந்திப்புவேளைக்கு 7 நாட்களுக்கு முன்பாக இன்னொரு தடுப்பூசி மருந்தினை நீங்கள் இட்டுக்கொண்டிருந்தால், உங்களுடைய தடுப்பூசி மருந்து வழங்குநருக்கு அதைத் தெரிவியுங்கள். உங்களுடைய சந்திப்புவேளையை இன்னொரு நேரத்திற்கு நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று உங்களுடைய தடுப்பூசி மருந்து வழங்குநர் உங்களைக் கேட்கக்கூடும்.

சுரம் அல்லது சுவாச நோயறிகுறிகள் எதுவும் உங்களுக்கு இல்லையெனில், தடுப்பூசி மருந்து இடப்படுவதற்கு முன்பாக ‘கோவிட்-19’ நோயறிவுச் சோதனையை நீங்கள் மேற்கொள்ளவேண்டிய தேவை இல்லை.

## இரண்டு மருந்தளவுகளைப் பெறுவதற்கான திட்டத்தினை முன்னதாகவே ஏற்படுத்திக்கொள்ளுங்கள்

உங்களுடைய ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்தின் இரண்டு அளவுகளை நீங்கள் பெற வேண்டியது முக்கியம். நீங்கள் ‘கோவிட்-19 ப்ஃபைஸர் [கோமிர்நாட்டி]’ தடுப்பூசி மருந்தினைப் பெற்றால், இரண்டு மருந்தளவுகளுக்கு இடையில் குறைந்த பட்சம் 3 வார கால இடைவெளி இருக்கவேண்டும். நீங்கள் ‘கோவிட்-19 ஆஸ்ட்ரா-ஸெனெகா’ தடுப்பூசி மருந்தினைப் பெற்றால், இரண்டு மருந்தளவுகளுக்கு இடையில் குறைந்த பட்சம் 12 வார கால இடைவெளி இருக்கவேண்டும். இரண்டு மருந்தளவுகளுக்கு இடைப்பட்ட இந்த 12 வார கால இடைவெளியை 4 வார காலத்திற்குக் குறையாத இடைவெளியாக மாற்றிக்கொள்வது குறிப்பிட்ட சில சூழல்களில் தகுந்ததாக இருக்கலாம். உங்களுடைய இரண்டாவது மருந்தளவை நீங்கள் இட்டுக்கொண்ட பிறகு குறைந்தபட்சமாக ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் ஆகும் வரை ‘கோவிட்-19’ -இற்கு எதிரான அதிகபட்சப் பாதுகாப்பு ஏற்படாது.

## உங்களுடைய தடுப்பூசி மருந்திடல் சந்திப்புவேளையின்போது நீங்கள் எதிர்பார்க்க வேண்டியது

உங்களுடைய ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்திடல் சந்திப்புவேளையின்போது நீங்கள் பின் வருவனவற்றைக் கொண்டுவர வேண்டும்:

- உங்களிடம் இருந்தால், புகைப்பட அடையாள ஆவணம் ஒன்று
- உங்களிடம் இருந்தால், ‘மெடிகெயர்’ அட்டை
- உங்களுடைய தொழிலின் நிமித்தமாக நீங்கள் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்கிறீர்களானால், உங்களுடைய தொழிலாளர் அடையாள அட்டை
- மருத்துவ நிலைகள், ஒவ்வாமைகள், இரத்தக் கசிவுக் கோளாறுகள் அல்லது ‘நோயெதிர்ப்புத் திறன் பாதிப்பு’ (அதாவது பலவீனமடைந்துவிட்ட நோயெதிர்ப்புத் திறன்) (immunocompromise) எதுவும் உங்களுக்கு இருந்தால், அவற்றைப் பற்றிய தகவல்கள்
- நீங்கள் உட்கொண்டுவரும் மருந்துகள் எதனையும் பற்றிய தகவல்கள்
- நீங்கள் ஏற்கனவே பெற்றுள்ள ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து எதனையும் பற்றிய தகவல்கள் (தடுப்பூசி மருந்தின் வர்த்தகப் பெயர் மற்றும் தடுப்பூசி மருந்து இடப்பட்ட திகதி)

- கடந்த காலத்தில் எவ்வொரு தடுப்பூசி மருந்திற்கும் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் எவ்வொரு ஒவ்வாமையையும் பற்றிய தகவல்கள்
- நீங்கள் தற்போது பார்த்துவரும் பொது மருத்துவர்/கள் (GP/s) மற்றும் சிறப்பு மருத்துவர்கள் எவரையும் பற்றிய தகவல்கள்
- முகக் கவசம் ஒன்று (உங்களுடைய மாநிலம்/எல்லைப்பகுதியினால் வேண்டப்பட்டால்).

உங்களுடைய சந்திப்புவேளையின் போது, 'கோவிட்-19' தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்வதைப் பற்றி உங்களுக்கு இருக்கவல்ல கேள்விகள் எதனைப் பற்றியும் உங்களுடைய தடுப்பூசி மருந்து வழங்குநருடன் உங்களால் கலந்துரையாட இயலும்.

நீங்கள் 60 வயதிற்குக் கீழ்ப்பட்டவரா என்பதையும், உங்களுக்கு மருத்துவ நோய் நிலைகள் எதுவும் உள்ளனவா, அல்லது மருந்துகள் எதனையும் நீங்கள் உட்கொண்டுவருகிறீர்களா என்பதையும் உங்களுடைய தடுப்பூசி மருந்து வழங்குநருக்குச் சொல்லுங்கள். குறிப்பாக, பின் வருவன உங்களுக்குப் பொருந்தினால் அவருக்கு நீங்கள் அதைத் தெரிவிப்பதை உறுதிப்படுத்துங்கள்:

- முன்பு உங்களுக்கு இடப்பட்ட 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தின் காரணமாக, அல்லது அந்தத் தடுப்பூசி மருந்தின் செய்பொருள் ஒன்றின் காரணமாக உங்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டிருந்தால்
- மற்ற தடுப்பூசி மருந்துகள் அல்லது மருந்துகளின் காரணமாக உங்களுக்கு 'ஆனஃபிலாக்ஸிஸ்' (anaphylaxis) எனும் ஒவ்வாமை (இது ஒரு தீவிர ஒவ்வாமை எதிர்வினையாகும்) ஏற்பட்டிருந்தால்
- வல்லுந மீளாய்வையடுத்து, முன்பு இடப்பட்ட 'கோவிட்-19' தடுப்பூசி அளவு ஒன்றின் காரணமாக ஏற்பட்டதாக சொல்லப்படும் மற்ற பாரதூரப் பாதக நிகழ்வு உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்
- சிகிச்சை தேவைப்படும், மற்றும் மீண்டும் மீண்டும் ஏற்படும் 'ஆனஃபிலாக்ஸிஸ்' (anaphylaxis) எனும் ஒவ்வாமையுடன் கூடிய உறுதிப்படுத்தப்பட்ட 'மேஸ்டோசைடோசிஸ்' (mastocytosis) (சில நோயெதிர்ப்புக் கலன்களின் அசாதாரண வளர்ச்சி) உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் வரலாறு இருந்தால்
- உடல் தசைகளுக்குள்ளாக இரத்தக் குழாய்களிலிருந்து இரத்தக் கசிவை ஏற்படுத்தும் 'கேப்பில்லரி லீக் சிண்ட்ரம்' (capillary leak syndrome) எனும் நிலை உங்களுக்கு இருப்பது எப்போதாவது கண்டறியப்பட்டிருந்தால்
- முன்பு இடப்பட்ட 'கோவிட்-19' தடுப்பூசி அளவு ஒன்றைத் தொடர்ந்து சோதனை மூலம் கண்டறியப்பட்ட 'த்ரோம்போட்டிக் த்ரோம்போசைட்டொபீனியா சிண்ட்ரம்' (Thrombotic Thrombocytopenic Syndrome (TTS)) உள்ளடங்க 'த்ரோம்போசைட்டொபீனியா' (thrombocytopenia)-வுடன் கூடிய பிரதானமான 'இரத்தக் குழாய் இரத்த உறைவு' (venous and/or arterial thrombosis) எப்போதாவது உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்
- 'ஹெபரின்' என்ற மருந்தின் காரணமாக ஏற்படும் 'இரத்த வட்டு'க் குறைபாடு' ('heparin induced thrombocytopenia' (HIT)), எனும் நோய்-நிலை, அல்லது 'சென்ட்ரல் வீனெஸ் சைனஸ் த்ரோம்போசிஸ்' (central venous sinus thrombosis (CVST) எனும் 'மையச் சிரை இரத்த உறைவு', அடிவயிற்று இரத்தக் குழாய்க(splanchnic veins)ளில் இரத்த உறைவுகள்,

அல்லது இரத்த உறைவுகளோடு சம்பந்தப்பட்ட ‘ஆண்ட்டிஃபாஸ்ஃபோலிபிட் சிண்ட்ரம் (antiphospholipid syndrome) ஆகிய நிலைகள் உங்களுக்கு ஏற்பட்டிருப்பதற்கான வரலாறு இருந்தால்

- ‘மையோகார்டைட்டிஸ்’ (myocarditis), மற்றும்/அல்லது ‘பெரிகார்டைட்டிஸ்’ (pericarditis) எனும் இதயத் தசை அழற்சி உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்
- ருமாட்டிக் ஃபீவெர்’ (rheumatic fever) எனப்படும் தீவிர மூட்டு, இதய-அழற்சிக் காய்ச்சல், அல்லது ‘எண்டோகார்டைட்டிஸ்’ (endocarditis) எனப்படும் உள்-இதய நோய்த்தொற்று தற்சமயம் அல்லது சமீபத்தில் உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்
- பிறப்பில் இருந்து இருக்கும் இதய நோய் (Congenital heart disease) உங்களுக்கு இருந்தால்
- ‘டைலேட்டெட் கார்டியோமையோபதி’ (Dilated cardiomyopathy) எனப்படும் இதய நோய் உங்களுக்கு இருந்தால் (30 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு)
- தீவிர மாரடைப்பு உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்
- நீங்கள் இதய மாற்று சிகிச்சையை மேற்கொண்டவர் என்றால்
- இரத்தக் கசிவுக் கோளாறு ஒன்று உங்களுக்கு இருந்தால், அல்லது இரத்த உறைவைக் குறைப்பதற்கான சிகிச்சையை (இரத்தத்தை மெலிதாக்குவதற்கான மருந்தினை) நீங்கள் பெற்றுவந்தால்
- நீங்கள் கர்ப்பமாக இருந்தால்
- உங்களுடைய நோயெதிர்ப்புத் திறன் பாதிக்கப்பட்டிருந்தால் (immunocompromised) (அதாவது, பலவீனமடைந்த நோயெதிர்ப்புத் திறன் உங்களுக்கு இருந்தால், அல்லது நோயெதிர்ப்புத் திறனை அடக்கும் மருந்துகளை நீங்கள் உட்கொண்டுவந்தால்)
- கடந்த காலத்தில் உங்களுக்குக் ‘கோவிட்-19’ ஏற்பட்டிருந்தால், அல்லது ‘கோவிட்-19’ காரணமாகத் தொடர்ந்துகொண்டிருக்கும் நோய் உங்களுக்கு இருந்தால்
- வேறொரு ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து ஒன்றை நீங்கள் பெற்றிருந்தால் (மற்றும் அது எந்த வர்த்தகப் பெயரைக் கொண்டது என்பது)
- கடந்த 7 நாட்களில் வேறு எந்தத் தடுப்பூசியையாவது நீங்கள் இட்டுக்கொண்டிருந்தால்

சில சூழல்களில், தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்வதற்கான சந்திப்புவேளை ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கு முன்பாக உங்களுடைய சுகாதாரப் பராமரிப்பு வழங்குனருடன் தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்வதைப் பற்றி கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வது இன்னும் நல்லதாக இருக்கலாம். நீங்கள் இட்டுக்கொள்ளும் குறிப்பிட்ட தடுப்பூசி மருதைப் பற்றிய தகவல்களையும் நீங்கள் வாசிக்கலாம்:

- ‘ப்ஃபைஸர் (கோமிர்நாட்டி) கோவிட்-19 தடுப்பூசி மருந்தினைப் பற்றிய தகவல்கள் (Information on COVID-19 Pfizer (Comirnaty) vaccine) அல்லது
- ‘ஆஸ்ட்ரா ஸெனெகா கோவிட்-19 தடுப்பூசி மருந்தினைப் பற்றிய தகவல்கள் (Information on COVID-19 Vaccine AstraZeneca)

## இந்தத் தடுப்பூசி மருந்தினை நீங்கள் பெறும் விதம்

மிகப் பொதுவாக உங்களுடைய மேல் புஜத் தசையில் ஒரு ஊசி மூலமாக இந்தத் தடுப்பூசி மருந்தினை நீங்கள் பெறுவீர்கள். தடுப்பூசி மருந்து இடப்பட்ட பிறகு, கண்காணிப்பிற்காக தடுப்பூசி இடும் சிகிச்சையகத்தில் குறைந்த பட்சம் 15 நிமிடங்களுக்கு நீங்கள் கட்டாயமாக இருக்கவேண்டும். உங்களுடைய மருத்துவ வரலாற்றைப் பொறுத்து, சிகிச்சையகத்தில் 30 நிமிடங்களுக்கு இருக்குமாறு நீங்கள் கேட்கப்படலாம்.

## உங்களுடைய சந்திப்புவேளையின்போது நீங்கள் கொடுக்கும் தகவல்கள் பயன்படுத்தப்படும் விதம்

உங்களைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் எப்படி சேகரிக்கப்படும், இருப்பில் வைக்கப்படும் மற்றும் பயன்படுத்தப்படும் என்பதைப் பற்றிய தகவல்களுக்கு https://www.health.gov.au/using-our-websites/privacy/privacy-notice-for-covid-19-vaccinations எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.